# இறையியல் (பாடம்-1)

ஒரு மனிதன் தனது இருதயத்தில் எவ்வாறு சிந்திக்கிறானோ அவ்வாறே இருக்கிறான். ஒரு மனிதனுடைய வாழ்வு அனைத்தும் அவன் சிந்திக்கிறதை நோக்கி திசை திரும்பும். அதிலும் சிறப்பாக தேவனை பற்றியுள்ள சிந்தனையை நோக்கியே அனைத்தும் திசை திரும்பும் என்று டேவிட் எஸ் கிளார்க் கூறுகிறார். எனவே தேவனை பற்றிய சரியான சிந்தனைக் கொண்டிருப்பதற்கு சரியான வகையில் இறையியலை கற்றுக் கொள்வது அவசியமாகும்.

Theology = Theos + Logos. அதாவது God + Word. இறையியல் = இறைவன் + இயல் (வார்த்தை அல்லது உபதேசம் அல்லது எழுத்துகள்). ஆக இறையியல் என்றால் கடவுளை பற்றிய உபதேசம் ஆகும். இங்கு நமக்கு ஒரு கேள்வி எழும்பலாம். இறைவனை நாம் அறிந்து கொள்ள முடியுமா?

இறைவனை நாம் அறிந்து கொள்ள முடியுமா?

இறைவனை அறிந்து கொள்ள முடியும் என்று ஒரு சாரார் நம்புகின்றார்கள். இன்னும் அநேகம் ஜனங்கள் இறைவனை அறிந்து கொள்வது அர்த்தமற்றது என்று சொல்லுகிறார்கள். வேறு சிலர் இறைவனை அறிந்து கொள்வது அவசியமற்றது என்றும் கூறுகின்றனர். இறைவன் அறியப்பட முடியாதவராய் இருக்கிறார். ஆகவே, இறைவனை அறிந்து கொள்வது அர்த்தமற்றது என்று இந்த மக்கள் கூறுகிறார்கள். இவர்களை நாம் அறியொணாமைக் கொள்கையை பின்பற்றுகிறவர்கள் என்று அழைக்கிறோம். அடுத்து, இறைவன் என்ற ஒருவர் இருப்பதாக எண்ணி, அவரை அறிய முற்படுவது அவசியமற்றது என்று மற்றொரு சாரார் கூறுகின்றார்கள். ஏனெனில் இறைவன் என்றொருவர் இல்லை. ஆதலால் அவரை இருப்பதாக எண்ணி, அவரை அறிய முற்படுவது அவசியமற்றது என்று இவர்கள் கூறுகிறார்கள். இதை அறிவிலிக்கொள்கை என்றழைக்கிறோம்.

நாம் வேதத்தில் பார்க்கும் போது சங்கீதம் 14:1ல் இறைவன் இல்லை என்று அறிவற்றவர்கள் சொல்வார்கள் என்று வாசிக்கின்றோம். இப்படிப்பட்ட ஜனங்களை நாம் இறைவனை மறுதலிக்கும் கொள்கை உடையவர்கள் என்று அழைப்பதில் தவறில்லை. இவர்களை நாத்திகர்கள் என்றும் நாம் அழைக்கின்றோம்.

அறியொணாமைக் கொள்கை

1. மனிதனுடைய அறிவு குறுகியது, அது வரையறைக்கு உட்பட்டது.
2. இயற்கைக்கு அப்பால் எல்லைக்கடந்து காணப்படுகிற காரியங்களை மனிதனால் அறிந்து கொள்ள முடியாது.

இந்த இரண்டு காரியங்களை அடிப்படையாகக் கொண்டது தான் அறியொணாமைக் கொள்கை. இதை குறித்து ஒரு வேத வல்லுநர் கூறும் போது கடவுளை முற்றிலும், துல்லியமாக அறியப்படக்கூடாதவர் என்று அறியொணாமைக் கொள்கையினுடருன் சேர்ந்து நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், கடவுள் கடவுளே, மனிதன்

மனிதனே. ஆகவே, கடவுளை நாம் முற்றிலும் கடவுளாகவே அறிந்து கொள்ள முடியும். மனிதனாக இருக்கும் மட்டும் அவன் தன்னுடைய எல்லை வரையறைக்குள் நின்று தான் அவன் தேவனை அறிய முடியும். இன்னும் அதிகமாக தேவனை அறிய வேண்டுமாயின் தேவனே தாமே மனிதனுடைய எல்லை வரையறையை தாண்டி வந்து தன்னை வெளிப்படுத்த வேண்டும்.

நாம் நம்புகிற சமய நம்பிக்கையில் அறியொணாமைக் கொள்கைக்கு இடம் இருக்கிறது. அதாவது, மனித அறிவு ஒரு எல்லையை தாண்டி செல்ல இயலாதது. ஆகவே, கடவுளை பற்றிய கேள்விகளுக்கு விடை கொடுப்பது சாத்தியமற்றது என்று சொல்வது சரி தான். அறியொணாமைக் கொள்கை இவ்வாறு கூறுவது சரி தான் என்பதை நாம் ஒத்துக் கொள்ள தான் வேண்டும். இந்த அறியொணாமைக் கொள்கையை பற்றி நாம் சுருக்கமாக சொல்ல வேண்டியதாயின், மனிதனுக்கு இறைவனை பற்றிய உண்மையான அறிவு இல்லை. அத்தகைய அறிவை பெற்றுக் கொள்வதும் இயலாத காரியம் என்பது தான் இவர்களது வாதமாகும்.

அறிவிலிக் கொள்கை

இந்த அறிவிலி கொள்கையினர் இறைவன் என்றொருவர் இல்லை. ஆதலால் இல்லாத ஒருவரை இருப்பதாக எண்ணி, அவரை அறிய முற்படுவது அவசியமற்றது என்றும், அது மூடதனமானது என்றும் கருதுகின்றார்கள். இறைவன் இறந்து விட்டார் என்றே இவர்கள் கூறுவதை கேட்கமுடியும். இன்றும் உலகில் எல்லா பகுதிகளிலும் கடவுள் இறந்து போனார் என்றே எதிரொலி கேட்கிறது. கடவுள் இல்லை என்றும், ஒரு சிலர் கடவுள் கட்டுபாட்டை இந்த உலகு இழந்து விட்டது என்றும் சொல்ல நீங்கள் கேட்டு இருப்பீர்கள். இது போல் நாத்திகர்கள் கடவுளை பற்றி அநேக கருத்துகளை சொல்லுகிறார்கள். அவர்கள் கூறுகிற கருத்தை நாம் இப்பொழுது பார்ப்போம்.

1.கடவுள் கற்பனையே

இந்த உலகில் மனிதன் பயத்தோடு சந்தேகத்தோடு வாழ்வை குறித்த ஐயத்தோடு வாழ்கிறான். ஆகவே, தன்னுடைய பயம் நீங்குவதற்காக கடவுள் என்கிற காரியத்தை கற்பனையாக படைத்துக் கொண்டான். இது நாத்திகர்களின் ஒரு கருத்து. ஆனால் சமய உணர்வு கற்பனையல்ல. அது உண்மையான அனுபவம்.

எதிர்வாதம்

கடவுள் மனிதனுடைய கற்பனையில் படைக்கப்பட்டவரல்ல. மனிதன் கற்பினையில் இறைவனை படைத்தால் அவன் இவ்விதமாக ஒரு பரிசுத்த தேவனை படைத்திருக்கமாட்டான். அவன் பாவத்தில் வாழவே விரும்புகிறான். ஆனால் நாம் வேதத்தில் பரிசுத்த தேவனை குறித்து வாசிக்கின்றோம். ஆகவே, பாவத்தை விரும்புகிற மனிதன் பரிசுத்தமான ஒரு தேவனை கற்பனையாக படைத்திருக்க இயலாது என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும்.

2.சுயநலத்தின் உருவாக்கமே இறைவன்

பழங்காலத்தில் வாழ்ந்த ஆசாரியர்களும் அரசர்களும் தங்களுடைய சுயலாபத்திற்காக கடவுள் என்கிற அமைப்பை உருவாக்கி அதன் மூலம் ஆடம்பர வாழ்க்கை நடத்தினர் என்று இவர்கள் இந்த நாத்திகர்கள் கூறுகின்றனர். தங்களுடைய வயிற்றுப்பிழைப்பிற்காக மற்றவர்களை அடிபணிய வைப்பதற்காக சுயநலமாக இந்த இறைவன் என்கின்ற ஒன்றை உருவாக்கிக் கொண்டார்கள் என்பது இந்த வாதம்.

எதிர்வாதம்

அதாவது, வயிற்றுப்பிழைப்பிற்காக ஒருவேளை இறைவனை படைக்க வேண்டுமானால் இதை விட வேறு லெகுவான வழிகள் எத்தனையோ இருக்கின்றன. மக்களை மயக்கி, அடிமையாக வைப்பதற்கென்று மன்னரும் அவருடைய அலுவலரும் சமயத்தைப் பயன்படுத்தினர் என்று கூறுவது தவறு. அவர்கள் தங்களுடைய அதிகாரங்களை பயன்படுத்தி, இல்லாவிட்டால் வேறு வழிகளில் மக்களை ஏமாற்ற வழிகள் இருக்கும் போது இவ்வாறு செய்ய வேண்டியதின் அவசியம் இல்லை.

இறை வழிபாட்டில் கால காலமாக குறைபாடுகள் இருக்கதான் செய்கிறது. அந்த குறைபாடுகளை நீக்குவதற்காக அவ்வப்பொழுது சீர்த்திருத்தவாதிகள் எழும்பிப் போராடி இருக்கதான் செய்கின்றார்கள். ஆகவே, மக்களை ஏமாற்றும் சுயநலவாதிகளின் கற்பனை கருவி கடவுள் என்று சொல்வது தவறான கருத்தாகும்.

3.துயரங்களின் அடைக்கலம்

மனிதன் உலகில் பலதரப்பட்ட துயரங்களை, இன்னல்களைபடுகிறான். அதை ஒவ்வொரு காலகட்டத்தில் பலதரப்பட்ட மக்களின் உதவியோடு தீர்த்துக் கொள்கிறான். குழந்தை பருவத்தில் பெற்றோரின் உதவியோடு, தன்னுடைய துயரங்களை தீர்த்து கொள்கிறான். பிறகு கணவருடைய உதவியோடு, இல்லாவிடில் அரசாங்க உதவியோடு, சட்ட உதவியோடு, துயரங்களை தீர்த்துக் கொள்கிறான். இதை எல்லாம் தாண்டி பிரச்சனை வரும்பொழுது அவன் தீமையிலிருந்து இரட்சிக்கக்கூடிய ஒரு மகா பெரிய சக்தியாக இறைவனை உருவாக்கிக் கொள்கிறான். அவ்வாறு இறைவனை கேடகமாக, அடைக்கலமாக அவன் உருவாக்கிக் கொண்டு, அந்த தேவனிடம் தன்னுடைய துயரங்களை போக்குவதற்காக வழிமுறைகளை காண முயற்சிக்கிறான் என்று இந்த கருத்துச் சொல்லுகிறது.

எதிர்வாதம்

மனிதன் துன்பகாலத்தில் மட்டும் இறைவனை நினைக்கிறான் என்று சொல்ல முடியாது. அவன் இன்பமான வேளையிலும் இறைவனை பாடி இல்லாவிட்டால் இறைவனுக்கு பலிசெலுத்தி அவன் மகிழ்கிறான். ஆகவே, துயரங்களின்

அடைக்கலமே இறைவன் என்று சொல்லுவது தவறு. இவ்வாறு அநேக விஞ்ஞான கருத்துகளை, தத்துவ கருத்துகளை இறைவன் இல்லை என்று சொல்லுகிறவர்கள் முன் வைக்கிறார்கள். ஆனால் அது என்றும் நிலைப்பதில்லை. விஞ்ஞானம் கூறுவதெல்லாம் இறுதி தீர்ப்பாக மாற முடியாது. இன்னொரு புதிய கண்டுபிடிப்பு வந்துவிட்டால், முன்பு சொன்ன விஞ்ஞான கருத்து தவறானதாகிவிடும். ஆகவே, விஞ்ஞானத்தை கொண்டும் நாம் இறைவன் இல்லை என்று நாம் நிர்ணயம் செய்ய முடியாது. இறைவன் இல்லை என்று விஞ்ஞானம் கூறுவதை இறுதியான ஒரு முடிவாக எடுக்க முடியாது. இறைவன் இல்லை என்று இப்படிப்பட்ட அநேக வாதங்கள் கூறினாலும், உண்மையான தெய்வத்தை அறியாத இவர்கள் போலியான தெய்வ கொள்கையை உடையவர்களாய் இருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. இறைவன் இல்லை என்று அவர்கள் சொன்னாலும் போலியான தெய்வத்தை அவர்கள் வணங்குகின்றார்கள் என்பது உண்மை. சமய வளர்ச்சி என்றால் என்ன? என்று பார்ப்போமானால் மனிதன் கடவுளை பற்றி நாளுக்கு நாள் பெறும் கருத்துகளின் வளர்ச்சியே சமயவளர்ச்சி என்று பொதுவாக கருதப்படுகிறது. அதிலும் குறிப்பாக இந்த கருத்துக்கள் கடவுளைப் பற்றிய உணர்வோடு இணைந்து வளருகின்றதாய் இருக்கிறது. இது மூன்று முதன்மையான விதங்களில் காணப்படுகிறது.

1. அனைத்திறைக் கொள்கை (Pentheism)
2. அருள் வெளிப்பாட்டை ஏற்காத இறையுண்மைக் கொள்கை (Deism)
3. இயற்கை கடந்த கடவுருயிர்த் தொடர்புக் கொள்கை (Theism)

1.அனைத்திறைக் கொள்கை

இயல்பான யாவும், அதாவது இந்த உலகில் காணப்படும் எல்லாமே கடவுள் என்ற கருத்துடையதுதான் இக்கொள்கை. இந்த இயற்கை கடவுளின் ஒரு பாகமே. இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டதும் இனிமேல் கண்டுபிடிக்கப்பட இருக்கிறதுமான அனைத்தும் கடவுளே. ஆக எல்லாமே இறைவன் என்பதுதான் இக்கோட்பாடு.

2.இயற்கைச் சமய வாதம்

இந்த சமய வாதம் அருள் வெளிப்பாட்டை ஏற்காத ஒன்றாகும். இறைவன் உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஆனால் இறைவனும் இயற்கையும் வேறு வேறாக இருக்கின்றது. கடவுளுக்கும் இயற்கைக்கும் மனிதனுக்கும் தொடர்பு இல்லை என்ற கருத்து இவர்களுடையது.

3.இறைமைக் கொள்கை

கடவுள் எல்லாவற்றையும் கடந்தவராக இருந்தாலும், அவர் இந்த இயல் உலகத்தில் (இயற்கை உலகத்தில்) வியாப்பித்து இருக்கிறவர் என்று இந்த கொள்கை கூறுகிறது. நாம் முந்தின இயற்கைச் சமய வாதத்தில் பார்த்தது போல அல்லாமல் கடவுளுக்கும் இயற்கைக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று இந்த

கொள்கை கூறுகிறது. நாம் இறைவனை அறிய வேண்டுமாயின் இறைவன் என்கிற ஒருவர் இருக்கிறதை நம்ப வேண்டும். நாத்திகர்கள் கடவுள் இல்லை என்று கூறினாலும், பொதுவாக கடவுள் என்றொருவர் இருக்கிறார் என்ற கருத்து எல்லா மனிதர்களுக்கும் உள்ளான மனதில் இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

நம்முடைய வேதாகமத்தில் கூட பொதுவான வெளிப்படுத்துதல் மூலம் எல்லா மனிதருக்கும் தன்னை பற்றி தேவன் வெளிப்படுத்தியுள்ளார் என்று ரோமர் 1:19-20 வசனங்களில் பார்க்கின்றோம். இவ்வாறு தேவன் தம்மை வெளிப்படுத்தியிருந்தும் அவர்கள் தங்கள் சிந்தைகளில் வீணர் ஆகி தேவனை அறிய முடியாதவர்களாகி போனார்கள் என்று தொடர்ந்துள்ள வசனங்களில் நாம் வாசித்து பார்க்கின்றோம்.

பொதுவாக இறைவன் இருப்பதை 3 வகைகளில் நாம் அறிந்துக் கொள்ளலாம்.

1.அறிவியல் வாதங்களின் விடைகள்

கடவுள் உண்டா என்ற கேள்விக்கு பகுத்தறிவின் மூலம் மெய்ப்பித்துக் காட்டும்படி விவாத முறையில் கூறப்படுகிற கருத்துகள் இவையாகும். இந்த கருத்துகளெல்லாம் உண்மையை நிரூபிக்கக்கூடிய வாதங்களன்று, மாறாக உண்மையை நோக்கி, சிந்தனையை திருப்பவல்ல ஏதுக்கள் மட்டுமே என்பதை நீங்கள் அறிய வேண்டும்.

(அ) மெய்ப்பொருள் மூல ஆய்வு வாதம் (Ontological Arugment)

சம்பூரணம் என்று நீ எவ்வளவு தூரம் நினைக்கக்கூடுமோ அவ்வளவு தூரம் நினைத்துக்கொள் அதுவே கடவுள் என்பது தான் இந்த வாதம். கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்ற உள்ளுணர்வு இயற்கையாகவே மனிதனுக்கு இருப்பதினால் அவர் உண்மையிலேயே இருக்க வேண்டும் என்று இந்த கொள்கை நம்புகிறது. நாம் பார்க்கிறதை போல வரலாற்று துவக்க காலத்திலிருந்து இன்று வரை இறைவனை மக்கள் பலத்தரப்பட்ட விதங்களில் வழிபட்டு வந்ததை நாம் வாசித்து இருக்கின்றோம். இந்த கொள்கை பிரபல ஞானிகளால் பயன்படுத்தப்பட்டது. Anselm என்பவர் இந்த கொள்கையை சிறப்பான முறையில் விளக்கினார். கடவுளை காட்டிலும், சம்பூரணர் எவரையும் மனிதன் எண்ணிப் பார்க்க இயலாது. ஆகவே, கடவுள் என்ற பூரணர் ஒருவர் உண்டு என்று நம்ப வேண்டியதாய் இருக்கிறது. ஒருவன் தன்னை மிஞ்சிய ஒரு கருத்தை, தன்னை மிஞ்சிய ஒரு ஆற்றலின் தூண்டுதலின்றி சிந்திக்க இயலாது. ஆகவே, சம்பூரணர் என்ற கருத்து அந்த சம்பூரணமாய் இருக்கிற தேவன் இருப்பதினால் அது மனிதனுடைய சிந்தனையில் தோன்றி இருக்கிறது என்பதே மெய்ப்பொருள் மூல ஆய்வு வாதத்தின் கருத்து.

(ஆ) இயலுலகு படைப்புக்கோட்பாடு வாதம் (Cosmological Arugment)

இந்த உலகில் உள்ளவைகளெல்லாம் தானாக உற்பத்தியானவை அல்ல. மட்டுமல்ல அவைகள் தன்னை தானே இயக்கி கொள்ளவும் இயலாது. ஒவ்வொரு

காரியத்திற்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும். துவக்கம் இருக்க வேண்டும். அந்த துவக்க காரணமே எல்லாவற்றையும் இயக்கும் பொருளாகும், அதுவே இறைவன்.

இந்த உலகமும் இதில் உள்ள அனைத்தும் உருவாக காரணராய் இருப்பதே இறைவன் என்பது தான் இதன் வாதம்.

(இ) இயல் திட்ட வாதம் (Teleological Arugment)

எதுவுமே நோக்கமின்றி செய்யப்படவில்லை. ஒரு இறுதி விளைவை நோக்கி திட்டமிடப்பட்ட ஒரு நோக்கத்தோடு இவ்வுலகம் சென்றுக் கொண்டிருக்கின்றது. இப்படியாக தெய்வீக முன் நோக்கமும், முன் நடத்துதலும் எல்லா நிகழ்வுகளிலும் இருக்கிறது. இது இயற்கையிலேயே உள்ள ஒழுங்கு. மட்டுமல்ல, இது ஞானமுள்ள ஒருவரால் திட்டமிடப்பட்டு, உருவாக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நாம் அறிய முடிகிறது. அவர் இறைவன். அவர் நோக்கம், ஒழுங்கு போன்றவற்றின் அடிப்படையில் உலகை அமைத்துள்ளார். இதுவே இயல் திட்ட வாதத்தின் முக்கியமான கருத்துக்கள். இது போன்ற பல வாதங்கள் உண்டு. ஆனாலும் இவை நமக்கு போதுமானவைகள்.

நாம் தேவனை எவ்வாறு அறிந்துக் கொள்ள முடியும்?

இறையியல் பாடத்தில் நாம் கற்றுக் கொண்டது போல தேவன் தன்னுடைய வார்த்தையின் மூலமாகவே தன்னை வெளிப்படுத்தியுள்ளார். ஆகவே அவரை அறிந்து கொள்ள அறிவியல் ரீதியான வாதங்கள் நமக்கு உதவி செய்யாது. தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை இந்த வாதங்கள் நமக்கு எடுத்துரைத்தாலும் அந்த தேவன் யார் என்பதை அவைகள் நமக்கு விளக்கவில்லை. நாம் தேவனை பற்றி நாமாகவே அறிந்துக் கொள்ள முடியாது. யோபு 11:7, 1 தீமோத்தேயு 6:15-16, யோவான் 4:24 ஏசாயா 40:28, அவர்கள் தேவனை அறிய முடியாதவர்களாக இருக்கின்றனர். ரோமர் 1:21-23, எபேசியர் 4:18, மானிட சிந்தைக்கும், தேவ சிந்தைக்கும் இடையே மிகப்பெரிய பிளவு உள்ளது என்று ஏசாயா 55:8-11 வசனங்களில் பார்க்கின்றோம். தேவன் தன்னை பற்றி வெளிப்படுத்தாவிட்டால் நம்மால் அவரை அறிந்து கொள்ள முடியாது என்பது நாம் அறிந்த உண்மை. தேவன் தம்முடைய வார்த்தையின் வழியாக தம்மை வெளிப்படுத்த சித்தங்கொண்டுள்ளார். அவ்வாறு அவர் சித்தங்கொண்ட படியினால் வேதத்தை வாசிப்பதின் வாயிலாகவே நாம் மெய்யாக அவரை அறிந்து கொள்ள முடியும். Berkhof என்பவர் கடவுள் தன்னை எந்த அளவுக்கு வெளிப்படுத்தியுள்ளாரோ அந்த அளவுக்கு மட்டுமே அவரை அறிந்துக்கொள்ள முடியும் என்று கூறியுள்ளார். Barth என்பவர் கடவுள் தாமே தம்மை மனிதனிடத்தில் வெளிப்படுத்தும் போது மட்டுமே அவரை அவனால் அறிந்து கொள்ள முடியும் என்கின்றார். ஆக, நாம் அவருடைய வேதத்திலிருந்து தேவனை அறிந்து கொள்ள முடியும்.

கேள்விகள்

1. இறைவன் இல்லை அல்லது இறைவனை அறிய முடியாது என்று கூறுகிறவர்களின் வாதங்களை பற்றிய கொள்கைகளைக் குறித்து இந்த பாடத்தின் வழியாக நீங்கள் கற்றுக்கொண்டதை எழுதுக?
2. இறைவன் இல்லை என்பதை கூறுவதற்காக நாத்திகர்கள் கூறும் கருத்துகளையும் அவைகளுக்கு பதில்கூறும் விதமாக கூறப்பட்டுள்ள எதிர்வாதங்களையும் எழுதுக?
3. இறைவன் இருக்கிறார் அல்லது இறைவனை அறிய முடியும் என்பதை கூறுவதற்காக உலக விஞ்ஞானிகள் கூறும் கொள்கைகளைப் பற்றி நீங்கள் இப்பாடத்தின் வழியாக கற்றுக்கொண்டதை எழுதுக?
4. வேதாகமத்தின் மூலமாக நாம் தேவனை அறிந்து கொள்வதற்கும், புரிந்து கொள்வதற்கும் இப்பாடத்தில் கூறப்பட்டுள்ளவைகளை எழுதுக?